அதற்கென்று தனி இயக்குநர் நியமித்து. அவருக்குப் பெருந் தொகை சம்பளம் தந்து, அவற்றை ஈடுகட்ட வேண்டிய வகையில் நூலக ஆணைக்குழு இயங்க முடியுமா என்பது ஐயப்பாட்டுக்குரிய ஒன்றாகும். அதற்காகத்தான் அடிப்படையாக இருக்கும் பிரச்சினைகளை ஆராய்ந்து, விரிவுபடுத்தி, அதற்கென்று தனி அதிகாரி போட வேண்டிய அவசியம் ஏற்படுமானால் அப்பொழுது போடலாம். இதனுடைய செலவை அந்த நூலக ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளும் வன்மை பெறவேண்டும். இதையெல்லாம் யோசித்து, கலந்தாலோசிக்கும் கட்டத்தில் அரசு இருக்கிறது.

THIRU B. VENKATASWAMY : Is it not a fact that local library authorities are not supplying Telugu, Kannada and Urdu books to the local libraries?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதைப்பற்றிய குறிப்பு இல்லை. அப்படி வாங்கக்கூடாது என்று தடை எதுவும் இல்லை. எந்த எந்தப் பகுதியில் என்னென்ன புத்தகங்கள் தேவைப்படுகின்றனவோ அந்தந்தப் பகுதியில் அந்தந்தப் புத்தகங்களை வாங்கிக்கொள்ளுகிறார்கள். ஒருசில பகுதிகளில் கன்னடப் புத்தகங்கள் தேவைப்படுமானால் அவற்றை அங்கே வாங்கி வைக்கிறார்கள். செங்கற்பட்டு மாவட்ட நூலக ஆணைக்குழு தெலுங்கு பகுதிகளில்—குறிப்பாக ப்ரொடத்தூர் பேட்டையில்—தெலுங்கு பேசும் மக்கள் படிப்பதற்கு ஏற்ற வகையில் தெலுங்குப் புத்தகங்கள் வாங்கி வைக்கிறார்கள். எங்கெங்கே குறைபாடு இருந்து, தெலுங்குப் புத்தகங்கள் தேவை என்று நூலக ஆணைக்குழுவிற்கு எழுதி அனுப்பினால் அதன்மீது தக்க கவனத்தைச் செலுத்தி அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

Revision of property tax by Madras Corporation.

* 281 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Corporation of Madras has requested the Government in 1970 to permit it to revise the property tax; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 1—10—1970 முதல் ரூ. 7000-க்கும் மேற்பட்ட மதிப்பீடுள்ள சொத்துகளுக்கு தற்போதுள்ள 25 சதவிகித வரியை 30 சதவிகிதமாகத் திருத்துவது பற்றி அரசின் ஒப்புதலை சென்னை மாநகராட்சி ஆணையர் கோரியுள்ளார். அதற்கான சென்னை நகர நகராட்சி நகராண்மை சட்டம் பிரிவு 99-ல் துணை பிரிவு 2-லுள்ள சரத்தைத் திருத்தலாம் என்றும் அவர் ஒரு யோசனை கூறியுள்ளார். மேற்படி சரத்தை திருத்துவது பற்றி ஆலோசனை அரசின் கவனத்தில் இருந்து வருகிறது.

[1971 சூலை 17

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் தனிப்பட்டவர்கள் இருபது முப்பது வீடுகளை வாங்கி வைத்துக் கொண்டு அவற்றை வாடகைக்கு விட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுக்கின்ற வகையில் இன்கம் டாக்ஸ்க்கு ஸ்லாப் இருப்பதைப் போல் ஒரு லட்சம் ரூபாய்க்கு சொத்து இருந்தால் 25 சதவிகிதத்தில் இருந்து 30 சதவிகிதம் வரையிலும், ரூபாய் 10 லட்சத்திற்கு மேல் போனால் 35 சதவிகிதம் வரி வசூலிப்பது என்றும் நகராட்சிமன்றத்திற்கு அனுமதி அளிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்போதிருக்கிற மாநகராட்சிச் சட்டத்தின் கீழ் அவர்கள் சொத்து வரியாக 15 சதவிகிதத்தில் இருந்து 25 சதவிகிதம் வரையில் போட்டுக் கொள்ளலாம் என்று உரிமை வழங்கப் பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் சென்னை நகராட்சி மன்றம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் ஸ்லாப் ஸிஸ்டத்தின் அடிப்படையில்தான் வைத்திருக்கிறார்கள். ஆண்டு வருமானத்தைப் பொறுத்து ரூ. 500-ம் அதற்கும் கீழ் இருந்தால் 15 சதவிகிதம் விதிக்கப்படுகிறது. ரூ. 500 முதல் ரூ. 1,000 வரை வருமானம் இருந்தால் 19 சதவிகிதம் விதிக்கப்படுகிறது. ரூ. 1,000-க்கு மேல் ரூ. 7,000 வரையில் 20 சதவிகிதம் விதிக்கப் படுகிறது. ரூ. 7,000-க்கு மேல் 25 சதவிகிதம் விதிக்கப்படுகிறது. அது இப்போது திருத்தப்பட்டு அரசினருடைய அனுமதிக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதில் ரூ. 500 ம் அதற்குக் கீழே உள்ள 15 சதவிகிதம் என்பதை மாற்ற வேண்டாமென்று நிறுத்தி இருக்கிறார்கள். ரூ. 500-க்கு மேல் ரூ. 1,000 வரையில் இருப்பதை 19 சதவிகிதத்திலிருந்து 21 சதவிகிதமாக மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ரூ. 1,000-க்கு மேல் ரூ. 5 000 வரை இருப்பதை இப்போது 20 சதவிகிதம் என்றிருப்பதை 22½ சதவீத மாக உயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ரூ. 5,000 முதல் ரூ. 7,000 வரையில் 25 சதவிகிதமாக உயர்த்தவேண்டுமென்றும் அதற்கு மேல் உள்ளதை 30 சதவிகிதமாக உயர்த்தவேண்டு மென்றும் கோரியிருக்கிறார்கள். 25 சதவிகிதம் வரை உயர்த்து வதற்கு இப்போதுள்ள சட்டமே இடம் கொடுக்கிறது. ஆனால் 30 சதவிகிதமாக உயர்த்தவேண்டுமென்றால் அதற்குரிய சட்டம் திருத்தப்படவேண்டும். அதை ஏற்றித்தருமாறு மாநகராட்சி மன்றம் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. இது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அதற்குரிய விதிகள் திருத்தப்பட்ட பிறகு எவ்வளவு அனுமதிக்கிறோமோ அதற்குள்ளாக உள்ள சதவிகித அடிப்படையில் மாநகராட்சி மன்றம் வரி விதிக்கலாம். இப்போது மதுரை மாநகராட்சி மன்றத்திற்குக் கூட 36 சதவிகிதம் வரையில் விதித்துக் கொள்ளலாம் என்று வரம்பு கட்டியிருக்கிறோம். அதற்குள் மாநகராட்சி மன்றம் விரும்பத்தக்க அளவிற்குப் போட்டுக் கொள்ளலாம்.

1971 ஜூலை 17]

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, இந்தச் சட்ட மன்றத் தொடரிலேயே 99(2) பிரிவை அம்மாதிரி திருத்துவதற்கும், மதுரை, சென்னை போன்ற கார்ப்பரேஷன்கள் ஒரேமாதிரியான முறையில் வரி விதிக்கும் அமைப்பை ஏற்படுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற யோசனைப்படியே இந்தச் சட்ட மன்றத்தொடர் கூட்டத்திலேயே கொண்டுவரவேண்டுமென்ற எண்ணத்தில்தான் அதற்கான முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

DR. H. V. HANDE: Sir, when the Government bring forward such a legislation, will the Government also keep in mind the houses whose rental value is Rs. 100 and less and give exemption to them as the Government are giving exemption to the lands less than one ground? If such an exemption is given, rent also will not increase. Will the Government come forward to give this concession?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அடுத்த வினு குடிசைகளுக்கான வரி பற்றியது. குடிசைகளைப் பொறுத்த வரையில் ஆண்டு வருமானம் ரூ. 18-ம் அதற்குக் குறைந்த அளவு வருமானம் உள்ளவைகளுக்கு வரி இல்லை என்றிருக்கிறது. ரூ. 100-ம் அதற்குக் கீழும் என்று கொண்டு வருவது என்பது பரிசீலனையில் இல்லை. ஆராய்ந்து பார்த்துத் தான் கொண்டுவரவேண்டும். அப்படிச் செய்தால் எல்லோரும் அதற்குக் கீழ் கொண்டுவரும் முயற்சிகளைச் செய்வார்கள். அதனுல் மாநகராட்சி மன்றத்திற்கும், நகராட்சி மன்றங்களுக்கும் எவ்வளவு வருமான இழப்பீடு ஏற்படும் என்பதையும் காண வேண்டும். இப்போதே உள்ளாட்சி மன்றங்களுக்கு போதிய நிதி வசதி இல்லை என்ற நிலைமை இருக்கிறது. உள்ளாட்சி மன்றங்கள் தங்கள் நிதிவசதியைப் பெருக்கிக் கொள்கிற பெரும் வாய்ப்பு சொத்து வரி ஒன்றுதான். ஆகவே. இதை ஆராய்ந்துதான் செய்ய வேண்டும். ஆராய்ந்த பிறகு நஷ்டம் எதுவும் இல்லாமல் தொல்லைகள் தவிர்க்கப்படும் சூழ்நிலை இருந்தால் கவனிக்கலாம். இப்போது அப்படிப்பட்ட ஆலோசனை எதுவும் அரசாங்கத்தின் கவனத்தில் இல்லை.

குடிசைகளுக்கான நகராட்சி வரி.

* 282 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சிப் பகுதிகளில் உள்ள குடிசைகளுக்கான நகராட்சி வரியினை நீக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இல்லை. வருடாந்திர மதிப்பீடு 18 ரூபாய்க்கு அதிகப்படாமலிருந்தால் சொத்து